**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| 2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27–ம் நாள் திங்கள்கிழமை வாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி உதவியாளர் திருமதி. பாண்டிசெல்வி என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | **குருசாமி** | தொழில்: | |
| த.பெ: | **நரசிம்மன்** | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**27.4.2026 OS.37/2023 வா.சா.1. குருசாமி**

**<u>10 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

1) நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது தகப்பனார் பெயரில் இருந்த பட்டாவை போஸ் அவரது பெயருக்கு மாற்றிவிட்டார் அது தொடர்பாக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். போஸ் பெயரில் பட்டா மாற்றம் செய்து 7, 8 ஆண்டுகள் இருக்குமா என்றால் இருக்கும். 7, 8 ஆண்டுகளுக்கு முன்பே போஸ் பெயரில் பட்டா மாறியுள்ள நிலையில் அதனை ரத்து செய்ய வருவாய் துறையில் நான் ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை.

2) நான் இந்த வழக்கில் 10ம் பிரதிவாதியை ஏன் சேர்த்துள்ளேன் என்றால் பத்திர ஆவணம் இல்லாமல் பட்டாவை மட்டும் வைத்து தவறான முறையில் லோன் வாங்கியுள்ளதால் 10ம் பிரதிவாதியை நான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன். மேற்படி போஸ் வாங்கிய கடன் கடன் நிவாரண சட்டத்தின் கீழ் தள்ளுபடி ஆகிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா வழக்கை நான் எத்தனை இலக்க சொத்திற்கு பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2 இலக்க சொத்திற்கு தாக்கல் செய்துள்ளேன்.

3) தாவா சொத்துக்கள் எனக்கு பாத்தியமுடையது என்பதைக்காட்ட நான் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பத்திரங்கள் பொறுத்து செல்லாது என கேட்டுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா வழக்கில் எனக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் சொத்தை அனுபவம் செய்வதற்கு வரி ரசீதுகள் எதுவும் போட்டுள்ளேனா என்றால்

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.04.27 19:10:39 +0530

போடவில்லை. தாவா படி எனக்கு எந்தவித பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(**மறுவிசாரணை இல்லை**).

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.04.27 19:10:49 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam